FORM NO. 124
JUDICIAL MAGISTRATE NO:II COURT– SATTUR
JUDGEMENT IN CALENDER CASE NO 38/2020
ON THE FILE OF JUDICIAL MAGISTRATE NO:II, COURT – SATTUR

| | |
|---|---|
| Complaint | அரசுக்காக:– காவல் உதவி ஆய்வாளர், வெம்பக்கோட்டை காவல் நிலையம். (குற்ற எண்.284/2019) |
| Accused | திரு.பால்பாண்டி, த/பெ.திரு.கருப்பையா. |
| Offence | குற்றம்சாட்டப்பட்டது :– எதிரி மீதுள்ள பிரிவுகள் 294(b), 354 A இ.த.ச மற்றும் பிரிவு 4 of TNPHW Act இன் கீழ்,<br>குற்றச்சாட்டு வனையப்பட்டது:– எதிரி மீதுள்ள பிரிவுகள் 294(b), 354A இ.த.ச மற்றும் பிரிவு 4 of TNPHW Act இன் கீழ், |
| Finding | எதிரி மீதுள்ள வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 354A மற்றும் பிரிவு 4 of TNPHW Act இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளி என்று முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(2) இன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| Sentence | எதிரிக்கு இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழான குற்றத்திற்கு ரூ. 2,000/– அபராதமும், பிரிவு 354A–ன் கீழான குற்றத்திற்கு இரண்டு வாரங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ. 8,000/– அபராதமும், பிரிவு 4 – பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றத்திற்கு இரண்டு வாரங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ. 10,000/– அபராதமும் விதித்து தண்டனை அளிக்கப்படுகிறது. |

| Description of the Accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Sl. No. (1) | Name (2) | Father's Name/ Husband's Name (3) | Caste or race | Occupation (4) | Residence (5) | age (6) |
| | பால்பாண்டி | கருப்பையா | இந்து | தொழிலாளி | வெற்றிலையூரணி | 54 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence (7) | Complaint (8) | Apprehension of appearance (9) | Release on Bail (10) | Commencement of trail (12) | Close of Trial (13) | Sentence or Order (14) | Explanation of delay (16) |
| 18.07.2019 | 19.07.2019 | 19.07.2019 | 02.08.2019 | 28.09.2022 | 23.03.2026 | 30.03.2026 | |

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் :– 28.02.2020
குற்ற இறுதி அறிக்கை கோப்புக்கு எடுத்த நாள் :– 02.03.2020
<u>இதன் நகல்</u> :– மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 21:22:41 +0530

Judicial Magistrate, No.II Sattur

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2026 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 30 ஆம் நாள் திங்கட்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண் 38/2020
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக,காவல் உதவி ஆய்வாளர், வெம்பக்கோட்டை காவல் நிலையம். (குற்ற எண்.284/2019) |
| 2. | எதிரியின் பெயர் (Name) | திரு.பால்பாண்டி,<br>த/பெ.திரு.கருப்பையா,<br>TELC தெரு,<br>வெற்றிலையூரணி. |
| 3. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 18.07.2019 |
| 8. | புகார் தேதி (Complaint) | 19.07.2019 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 19.07.2019 |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 02.08.2019 |
| 11. | Commitment | |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 28.09.2022 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 23.03.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | எதிரி மீதுள்ள வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 354A மற்றும் பிரிவு 4 of TNPHW Act இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளி என்று முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(2) இன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>எதிரிக்கு இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழான குற்றத்திற்கு ரூ. 2,000/– அபராதமும், பிரிவு 354A–ன் கீழான குற்றத்திற்கு இரண்டு வாரங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ. 8,000/– அபராதமும், பிரிவு 4 – பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றத்திற்கு இரண்டு வாரங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ. 10,000/– அபராதமும் விதித்து தண்டனை அளிக்கப்படுகிறது. |



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.30 21:22:50 +0530

| | | |
|---|---|---|
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or finding on Accused) | தீர்ப்பு நகல் இலவசமாக எதிரிக்கு வழங்கப்பட்டது. |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் காலதாமதம். |

இவ்வழக்கானது என் முன்பு 23.03.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.A.விஸ்வநாத், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**தீர்ப்புரை**

**1. குற்றச்சாட்டு :–**

**1.1.** 18.07.2019 ம் தேதி இரவு 07.45 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரரின் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை என்று ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்ற நிகழ்நிலை புகார்தாரரின் மகனும், நிகழ்நிலை புகார்தாரரின் அக்கா மகள் சசிகலாவும் திரும்ப வருவதை எதிரிபார்த்து 18.07.2019 ம் தேதி இரவு 11.00 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரரின் வீட்டு முன்பாக நின்று கொண்டிருந்த போது, நல்ல குடிபோதையில் அங்கு வந்த எதிரி பால்பாண்டி தனியாக நின்று கொண்டிருந்த நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து "ஏண்டி புண்டை மகளே வாடி என் கூட படுக்கிறதுக்கு காசு தர்றேன்" என்று அசிங்கமாக திட்டியுள்ளார். அதுக்கு நிகழ்நிலை புகார்தாரர் எதிரி பால்பாண்டியை பார்த்து எதுக்கு இப்படி அசிங்கமாக பேசுறீங்க என்று கேட்டவுடன் எதிரி பால்பாண்டி நிகழ்நிலை புகார்தாரரிடம் "ஓசியாவா கூப்புடுறேன் காசு தர்ரேன் என்று சொல்லி தானே கூப்பிடுறேன்" என்று பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து நிகழ்நிலை புகார்தாரரின் கையை பிடித்து இழுத்து மானபங்கப்படுத்தி, நிகழ்நிலை புகார்தாரருக்கு அருவருப்பையும், அவமானத்தையும் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவுகள் 294(b), 354A இ.த.ச மற்றும் பிரிவு 4 of TNPHW Act இன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல் :–**

இவ்வழக்கில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 21:22:55 +0530

3. **குு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை :–**

**3.1.** எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர்கள் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறினார்.

**3.2.** இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, எதிரி மீது பிரிவுகள் 294(b), 354A இ.த.ச மற்றும் பிரிவு 4 of TNPHW Act –ன் படி குற்றச்சாட்டுக்கள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவரிடம் விளக்கி கூறிய போது, எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **அரசு தரப்பு சாட்சிகள் :–**

பட்டியல் சாட்சிகளில் இருந்து 4 நபர்கள் – அ.சா.1 முதல் அ.சா.4 வரை அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு :–**

**5.1.** அ.சா.1 – மாலதி, வெற்றிலையூரணியில் குடியிருந்து வருகிறார். இவ்வழக்கின் எதிரியும் அதே ஊரைச் சேர்ந்தவர் ஆவார். 18.07.2019–ஆம் தேதி இரவு 11:00 மணி அளவில், அ.சா.1 – மாலதி அவருடைய வீட்டிற்கு வெளியே நின்று போனில் பேசிக் கொண்டிருந்தபோது, இவ்வழக்கின் எதிரி பால்பாண்டி குடிபோதையில் வந்து, அ.சா.1 – மாலதியின் கையைப் பிடித்து இழுத்து, "காசு கொடுக்கிறேன், என் கூட படுக்கவா" என்று கூறினார். மேலும், அவர் அ.சா.1 – மாலதியைப் பார்த்து "தேவிடியா, சுன்னி" என்று கெட்ட வார்த்தைகளால் ஆபாசமாகப் பேசினார். அருகில் யாரும் இல்லை என்பதால், அ.சா.1 – மாலதி வீட்டிலிருந்து நடுத்தெருவிற்கு ஓடி வந்துவிட்டார். பின்னர், இரவு 12:00 மணிக்கு வீட்டிற்கு வந்த தன்னுடைய மகன் சிவாவிடமும், மருமகன் கண்ணனிடமும் நடந்த விபரங்களைக் கூறி, மறுநாள் வெம்பக்கோட்டை காவல் நிலையத்திற்குச் சென்று அ.சா.ஆ.1 – புகார் கொடுத்தார்.

**5.2.** அப்புகாரை பெற்றுக்கொண்ட தலைமைக்காவலர் நடராஜன், இ.த.ச. பிரிவுகள் 294(பி), 354 மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ஆகிய குற்றங்களின் கீழ், குற்ற எண்: 284/2019–ஆக முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்தார். இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் காளிமுத்து



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 21:23:03 +0530

(அ.சா.4), 19.07.2019–ஆம் தேதி காலை 11:00 மணிக்குச் சம்பவ இடத்திற்குச் சென்று, சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் அ.சா.3 – சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.2 மற்றும் 4) தயார் செய்தார். அவர் சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். மதியம் 1:00 மணிக்கு எதிரியைக் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். அ.சா.4 – உதவி ஆய்வாளர் காளிமுத்துவின் புலன் விசாரணையில் வழக்குச் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால், எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6.** <u>**கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை**</u> **:–**

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, அவர் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்.

**7.** <u>**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**</u>

எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 354A இ.த.ச & 4 of TNPHW Act இன் கீழ் வனைந்துள்ள குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8.** <u>**வாதங்கள்**</u>

**8.1.** அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், காலதாமதமாகக் கொடுக்கப்பட்ட புகார் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணத்துடன் இருப்பதால் அது அரசு தரப்பு வழக்கைப் பாதிக்கக்கூடியதல்ல என்றும் வாதிட்டார். சிறு அளவிலான முரண்பாடுகள் அரசு தரப்பு சாட்சியத்தைப் பதிக்கக்கூடியதல்ல என்றும், அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட வேண்டுமே தவிர, அனைத்துத் தேவையற்ற சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் குறிப்பிட்டார். எனவே, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து, எதிரிக்கு அதிகபட்ச தண்டனையும், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இழப்பீடும் வழங்கித் தீர்ப்பளிக்க வேண்டும் என்று சமர்ப்பித்தார்.

**8.2.** எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், வழக்குச் சம்பவம் 18.07.2019–ஆம் தேதி இரவு 11:00 மணிக்கு நடைபெற்றதாகக் கூறப்பட்டாலும், 19.07.2019–ஆம் தேதி காலை 10:00 மணிக்குத்தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார். ஆனால்,



S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 21:23:08 +0530

அ.சா.1 – மாலதி மற்றும் கண்ணன் ஆகியோர் அவர்களின் சாட்சியங்களில், வழக்குச் சம்பவம் நடைபெற்ற அன்றே சம்பவ இடத்திற்குப் போலீசார் வந்துவிட்டதாகச் சாட்சியம் அளித்துள்ளதைச் சுட்டிக்காட்டி, இப்புகார் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைக்காகவும், பின் யோசனையின் பேரிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

**8.3.** அ.சா.1 – மாலதி தனது சாட்சியத்தில், சம்பவத்தின் போது அவர் வீட்டிற்குள் இருந்து வெளியே ஓடி வந்தார் என்று கூறியுள்ள நிலையில், புலன் விசாரணை அதிகாரியிடம் அவர் கொடுத்த வாக்குமூலத்தில் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது சம்பவம் நடைபெற்றதாகக் கூறியுள்ள முரண்பாட்டைச் சுட்டிக்காட்டியும், அ.சா.2 – கண்ணனுக்கு இச்சம்பவம் பற்றி அ.சா.1 – மாலதி கூறியதன் மூலமே தெரியும் என்று அவர்கள் இருவரும் அளித்துள்ள சாட்சியத்தையும், சம்பவம் நடைபெற்ற உடனேயே அந்தத் தெருவில் மக்கள் கூடிவிட்டார்கள் என்று அ.சா.1 – மாலதி சாட்சியமளித்துள்ள போதிலும், அவ்வாறு கூடியவர்களில் யாரையும் இந்த வழக்கில் விசாரணை செய்யவில்லை என்பதை சுட்டிக்காட்டியும், அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால், எதிரிக்கு இவ்வழக்கில் சந்தேகத்தின் பலன் அளிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

9. **<u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :–**

**9.1.** இந்த வழக்கில் அரசு தரப்பில் நான்கு நபர்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.1 – மாலதி, பாதிக்கப்பட்ட நபரும் புகார்தாரரும் ஆவார். அ.சா.2 – கண்ணன், அ.சா.1 – மாலதியின் மருமகன் ஆவார். அவர் வழக்குச் சம்பவம் நடைபெற்ற பிறகு சம்பவ இடத்திற்கு வந்து அ.சா.1 – மாலதியைச் சமாதானப்படுத்தியது பற்றியும், மறுநாள் காலை காவல் நிலையத்திற்கு அ.சா.1 – மாலதியுடன் சென்று புகார் கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 – சுப்பிரமணியன் 'பார்வை மகஜர்' சாட்சியாகவும், அ.சா.4 – உதவி ஆய்வாளர் காளிமுத்து புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த சாட்சியாகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

**9.2.** அ.சா.1 – மாலதி அவருடைய சாட்சியத்தில், 18.07.2019–ஆம் தேதி இரவு 11 மணி அளவில் அவர் வீட்டிற்கு வெளியே நின்று போனில் பேசிக் கொண்டிருந்தபோது, எதிரி பால்பாண்டி குடிபோதையில் வந்து தன்னுடைய கையைப் பிடித்து இழுத்து, "காசு கொடுக்கிறேன் என் கூட படுக்கவா" என்று கூறியதாகவும், அவரைப் பார்த்து "தேவிடியா சுன்னி" என்று கெட்ட வார்த்தைகளால் பேசியதாகவும், யாரும் பக்கத்தில் இல்லை என்ற காரணத்தினால் வீட்டிலிருந்து வெளியே நடுத்தெருவிற்கு ஓடிவிட்டதாகவும் கூறியுள்ளார்.



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 21:23:14 +0530

மேற்படி அ.சா.1 – மாலதி அளித்துள்ள சாட்சியம், அவர் இந்த வழக்கில் கொடுத்துள்ள புகார் மனுவில் உள்ள சங்கதிகளை உறுதி செய்யும் வகையில் அமைகிறது.

**9.3.** புகாரிலும் அ.சா.1 – மாலதி, வழக்குச் சம்பவம் நடைபெறும்போது தன்னுடைய வீட்டிற்கு முன்பாக நின்று கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 – மாலதி அவருடைய முதல் விசாரணையில், "வீட்டிலிருந்து நான் வெளியே நடுத்தெருவிற்கு ஓடிவிட்டேன்" என்று கூறியுள்ளது, அவருடைய வீட்டு முன்பிருந்து வீட்டின் முன்பு அமைந்துள்ள தெருவிற்கு வந்ததையே குறிப்பிடுகிறது தவிர, வீட்டிற்குள் இருந்து வெளியே ஓடி வந்ததைக் குறிப்பிடவில்லை. அதை விளக்கக்கூடிய வகையில் முழு வரியும் அமைந்துள்ளது. அதாவது அ.சா.1 – மாலதி வழக்குச் சம்பவம் நடைபெறும்போது, "யாரும் பக்கத்தில் இல்லை என்ற காரணத்தினால் வீட்டிலிருந்து நான் வெளியே நடுத்தெருவிற்கு ஓடிவிட்டேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார். வழக்குச் சம்பவம் இரவு 11 மணிக்கு நடைபெற்றது என்பதால், அச்சமயம் பக்கத்து வீட்டில் இருக்கக்கூடிய நபர்களோ, தெருவில் போகக்கூடிய நபர்களோ இருக்க வாய்ப்பு இல்லை என்பதால், மேற்படி அ.சா.1 – மாலதியின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே இருக்கிறது.

**9.4.** குறிப்பாக, அ.சா.1 – மாலதி இந்த நீதிமன்றத்தில் அவருக்கு எதிரியால் நடைபெற்ற வன்கொடுமை தொடர்பாக சாட்சியம் அளிக்கும்போதும் அழுதுகொண்டே கூறியுள்ளார் என்பது நீதிமன்றக் குறிப்பிலிருந்து தெரிகிறது. வழக்குச் சம்பவம் நடைபெற்றதிலிருந்து சுமார் ஆறு ஆண்டுகள் கழித்து அ.சா.1 – மாலதியின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டபோதும், சம்பவத்தின் விளைவாக அவருக்கு ஏற்பட்ட வேதனையை விளக்குவதாக அவர் அழுதுகொண்டே சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலை அமைகிறது.

**9.5.** வழக்குச் சம்பவம் நடைபெற்ற உடனே காவல் நிலையத்திற்குப் போன் மூலம் தகவல் கூறியவுடன், சம்பவ இடத்திற்குப் போலீசார் வந்துவிட்டார்கள் என்பது அ.சா.1 – மாலதி மற்றும் அ.சா.2 – கண்ணனின் சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது. மேலும், அ.சா.1 – மாலதியின் குறுக்கு விசாரணையில் அவரும் எதிரியும் வெவ்வேறு சமுதாயத்தைச் சார்ந்த நபர்கள் என்பதும், அ.சா.1 – மாலதியின் வீடு அருகே அவர் சார்ந்த சமுதாய மக்கள் குடியிருந்து வருகிறார்கள் என்பதும், இருவரும் வெவ்வேறு சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் வேறு பிரச்சினை எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகப் போலீசார் அங்கு காவலில் இருந்தார்கள் என்பதும் தெரியவருகிறது. இவைகள் எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்ட கருத்துரு கேள்விகள் மூலம் வெளிக்கொண்டு வரப்பட்ட சாட்சியங்கள் என்பதால், அவை



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 21:23:20 +0530

எதிரியைக் கட்டுப்படுத்தக் கூடியதாகும்[1].

**9.6.** அ.சா.1 – மாலதி கூறுவதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால், சம்பவ இடத்திற்கு இரவு நேரத்தில் போலீசார் வந்திருக்க வேண்டிய அவசியமும், பாதுகாப்பு ஏற்பாடு செய்திருக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது. அ.சா.1 – மாலதியின் வீட்டின் அருகே சம்பவ நாளில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்ததா என்பது தொடர்பாகப் புலன் விசாரணை அதிகாரியிடம் 7 வது பத்தியில் கேள்வி எழுப்பியபோது, அது அவருக்கு ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, அவ்வாறு பாதுகாப்புப் பணிக்குக் காவலர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை என்று அவர் சாட்சியம் அளிக்கவில்லை.

**9.7.** புகார் கொடுத்த அ.சா.1 – மாலதி மற்றும் அதில் சாட்சி கையொப்பமிட்டுள்ள அ.சா.2 – கண்ணன் ஆகிய இருவரும், அவர்களின் சாட்சியங்களில் சம்பவத்திற்கு மறுநாளான 19–ஆம் தேதி காலை 7 மணிக்குக் காவல் நிலையத்திற்குச் சென்றுவிட்டதாகக் கூறியுள்ளார்கள். காவல் நிலையம் அவர்களின் வீட்டிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது என்பது அ.சா.1 – மாலதியின் சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது. இந்தச் சூழ்நிலையில், விடிந்த பிறகு புகார் கொடுக்கச் சென்றது தேவையற்ற காலதாமதமாகத் தெரியவில்லை.

**9.8.** இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை, காலை 10 மணிக்கு புகார் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அ.சா.1 – மாலதி மற்றும் அ.சா.2 – கண்ணனின் சாட்சியத்திலிருந்து அவர்கள் காலை 7 மணிக்கே காவல் நிலையத்திற்குச் சென்றுவிட்டார்கள் என்று தெரியவருகிறது. எனவே, காவல்துறையினரின் காலதாமதத்தால் மேற்படி 3 மணி நேர இடைவெளி ஏற்பட்டுள்ளது என்பது புரிகிறது. புகாரில் உள்ள சங்கதிகளை வேறு வகையில் சந்தேகத்திற்கு உள்ளாக்கக்கூடிய எவ்விதத் தகவல்களும் அ.சா.1 – மாலதி மற்றும் அ.சா.2 – கண்ணனின் சாட்சியத்திலிருந்து வெளிக்கொண்டு வரப்படவில்லை. எனவே, புகார் மனு கொடுக்கக் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பது மட்டுமே

1 2023 LiveLaw (SC) 279 : The Hon'ble Supreme Court : C.A.No.. 1910 OF 2010; MARCH 29, 2023 : BALU SUDAM KHALDE AND ANOTHER versus THE STATE OF MAHARASHTRA

40..... To put it in other words, suggestions by itself are not sufficient to hold the accused guilty if they are incriminating in any manner or are in the form of admission in the absence of any other reliable evidence on record. It is true that a suggestion has no evidentiary value but this proposition of law would not hold good at all times and in a given case during the course of cross-examination the defence counsel may put such a suggestion the answer to which may directly go against the accused and this is exactly what has happened in the present case.

42. Therefore, we are of the opinion that suggestions made to the witness by the defence counsel and the reply to such suggestions would definitely form part of the evidence and can be relied upon by the Court along with other evidence determine the guilt of the accused.

44. During the course of cross-examination with a view to discredit the witness or to establish the defence on preponderance of probabilities suggestions are hurled on the witness but if such suggestions, the answer to those incriminate the accused in any manner then the same would definitely be binding and could be taken into consideration along with other evidence on record in support of the same.

45. However, it would all depend upon the nature of the suggestions and with what idea in mind such suggestions are made to the witness.



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 21:23:27 +0530

புகாரின் உண்மைத் தன்மையையோ அல்லது அரசு தரப்பு வழக்கையோ சந்தேகத்திற்கு உள்ளாக்குவதாக இல்லை. ஆகவே, இரவு 11 மணிக்கு நடைபெற்ற சம்பவத்திற்கு மறுநாள் காலை 10 மணிக்குக் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளது அரசு தரப்பு வழக்கைப் பாதிப்பதாக இல்லை[2].

**9.9.** அ.சா.2 – கண்ணனும், சிவாவும் இரவு 12 மணிக்குத்தான் அ.சா.1 – மாலதியின் வீட்டிற்கு வந்ததாக, அ.சா.1 – மாலதி அவருடைய முதல் விசாரணை வாக்குமூலத்திலேயே கூறியுள்ளார். அ.சா.2 – கண்ணனும் அவருடைய சாட்சியத்தில், வழக்குச் சம்பவம் பற்றி அ.சா.1 – மாலதி கூறியே தனக்குத் தெரியும் என்று தெரிவித்துள்ளார். எனவே, கண்ணன் அவருடைய சாட்சியத்தில் தான் இரவு 11 மணிக்கு அ.சா.1 – மாலதியின் வீட்டிற்கு வந்தபோது, எதிரி பால்பாண்டி அ.சா.1 – மாலதியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தார் என்று கூறியுள்ளது, அவர் நேரில் பார்க்காத சங்கதி தொடர்பான சாட்சியமாகவே இருக்கிறது.

**9.10.** இருந்தபோதிலும், இந்த வழக்குச் சம்பவம் குறித்து அ.சா.1 – மாலதி தன்னிடம் கூறியதாகக் அ.சா.2 – கண்ணன் அளித்துள்ள சாட்சியம், இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 6–ன் படி தொடர்புடைய சங்கதிகளாக இருக்கிறது[3]. எனவே, வழக்குச் சம்பவம் எவ்வாறு

---

2 The Hon'ble IN THE SUPREME COURT OF INDIA : HARIPRASAD @ KISHAN SAHU //Vs// STATE OF CHHATTISGARH : CRIMINAL APPEAL No. 1182 OF 2012, NOVEMBER 7th, 2023 : 2023 INSC 986

9. It cannot be gainsaid that the First Information Report in a criminal case is an extremely vital and valuable piece of evidence for the purpose of corroborating the oral evidence adduced during the course of the trial. The object of insisting upon prompt lodging of the report to the police in respect of the commission of an offence is to obtain early information regarding the circumstances in which the crime was committed, the names of actual culprits and the part played by them as well as names of the eye witnesses present at the scene of occurrence (Thulia Kali vs. The State of Tamil Nadu; 1972 (3) SCC 393). It is also an equally settled legal position that the receipt and recording of information report by the police is not a condition precedent to set into motion a criminal investigation (The King Emperor vs. Khawaja Nazir Ahmad; AIR 1945 PC 18). The First Information Report under Section 154 of Cr.PC, as such could not be treated as a substantive piece of evidence it can only be used to corroborate or contradict the informant's evidence in the Court. As held by three-Judge Bench of this Court (Apren Joseph alias current Kunjukunju & Ors. Vs. State of Kerela; 1973 (3) SCC 114), FIR is very useful if recorded before there is time and opportunity to embellish, or before the informant's memory fades. Undue or unreasonable delay in lodging the FIR, therefore, may give rise to suspicion which put the Court on guard to look for the possible motive and the explanation for the delay and consider its effect on the trustworthiness or otherwise of the prosecution version.

10. Of course, the delay in lodging an FIR by itself cannot be regarded as the sufficient ground to draw an adverse inference against the prosecution case, nor could it be treated as fatal to the case of prosecution. The Court has to ascertain the causes for the delay, having regard to the facts and circumstances of the case. If the causes are not attributable to any effort to concoct a version, mere delay by itself would not be fatal to the case of prosecution.

3 Hon'ble Madras High Court : 2005 MLJ CRL (1) 1039 : Khaja Hussain And Ors. v. Inspector Of Police, Coimbatore : Aug 2, 2005

18. In the light of these principles, if we look at the evidence of P.W 1, we have to hold that his evidence is not only fully reliable, but also is corroborated by the material particulars. P.W 1, on seeing the attack and after verifying the fact that the deceased died, immediately came and told both P.W 3, father, and P.W 4, mother, that four persons, who earlier threatened them to vacate the area, attacked the deceased. Further, P.W 1 informed his parents, namely, P.Ws 3 and 4 even immediately after the threat, that was given out to the deceased family. This aspect has been spoken to by P.Ws 3 and 4.

19. In this regard, it would be appropriate to refer to section 6 of the Evidence Act.

"Relevancy of facts forming part of same transaction — Facts which, though not in issue, are so connected with a fact in issue as to form part of the same transaction, are relevant, whether they occurred at the same time and place or at different times and places."

20. Illustration (a) to Section 6 reads thus:

"Whatever was said or done either by the victim or the accused or the by-standers at the time of occurrence, or so shortly before or after it as to form part of the transaction, is a relevant fact."

21. Thus, it is clear that whatever was said by P.W 1 to P.Ws 3 and 4 immediately after the occurrence or so shortly before or after the occurrence, the part of the transaction is admissible. The aspect of the law relating to section 6 of the Evidence Act has been



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 21:23:34 +0530

நடைபெற்றது என்பது தொடர்பாக, சம்பவம் நடைபெற்ற உடனே அ.சா.1 – மாலதி கண்ணனிடம் கூறிய சங்கதிகள், அ.சா.1 – மாலதியின் சாட்சியத்தை உறுதி செய்யக்கூடிய வகையில் அமைகின்றன.

**9.11.** அ.சா.1 – மாலதியின் சாட்சியம் நம்பக்கூடிய வகையில் இருப்பதால், அவருடைய சாட்சியத்தை உறுதி செய்ய சம்பவ இடத்தில் வசிக்கக்கூடிய வேறு நபர்களைச் சாட்சிகளாக விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும், வழக்குச் சம்பவம் நடைபெறும் போது அங்கு அ.சா.1 – மாலதியைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதால், வேறு நபர்களைச் சாட்சிகளாக விசாரித்தாலும் அவர்கள் நேரில் பார்த்த சாட்சிகளாக இருக்கப்போவதில்லை. எனவே, வழக்குச் சம்பந்தமாக அ.சா.1 – மாலதியின் வீட்டு அருகே குடியிருக்கக்கூடிய நபர்களைச் சாட்சிகளாக விசாரிக்காதது, அரசுத் தரப்பு வழக்கை எந்த வகையிலும் பாதிப்பதாக இல்லை.

**9.12.** அ.சா.1 – மாலதி அவருடைய சாட்சியத்தில் எதிரி தன்னிடம் நடந்து கொண்டது தொடர்பாகக் கூறுகையில், அழுதுகொண்டே சாட்சியம் அளித்துள்ளார். இன்றும் வெளியே சென்றால் எதிரி ஏதாவது செய்துவிடுவார் என்ற பயத்தில் இருப்பதாக அவர் கூறியுள்ளதிலிருந்து, இந்த வழக்கில் எதிரியின் செயலால் அ.சா.1 – மாலதிக்கு அருவருப்பும் பயமும் ஏற்பட்டுள்ளது என்பதும், எதிரி அ.சா.1 – மாலதியைப் பாலியல் ரீதியிலான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளார் என்பதும் அரசுத் தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**10. <u>முடிவு</u> :–**

**10.1.** எதிரி மீதுள்ள வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 354A மற்றும் பிரிவு 4 of TNPHW Act இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளி என்று முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(2) இன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**10.2.** எதிரி எழுதி கொடுத்த பிணை ஆவணம் ரத்து செய்யப்படுகிறது.

**10.3.** இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**11. <u>தண்டனை உத்தரவு</u>**

**11.1.** எதிரிக்கு குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் பலன்கள் கிடைக்கக்கூடியதா என்று பரிசீலனை செய்தபோது, இவ்வழக்கு குற்றம் பெண்ணுக்கு எதிரானது என்பதாலும், குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டும், எதிரிக்கு எதிராக மொத்தம் பத்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது இன்று காவல்துறை தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

clearly dealt with in detail in 1997 (2) Law Weekly (Cri) 532 : (1997 Cri LJ 3854) (Venkatesan v. State, by Inspector of Police, Tiruporur), by a Division Bench of this Court.



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 21:23:42 +0530

CCTNS அறிக்கையிலிருந்து தெரியவருவதாலும், எதிரிக்கு மேற்படி சட்டத்தின் பலன் கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11.2.** எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை குறித்துக் கேட்டபோது, அவருக்கு திருமணமாகவில்லை என்றும், அவருக்கு ஆதரவாக யாரும் இல்லை என்றும் கூறி, அபராதம் விதித்து குறைந்தபட்ச தண்டனை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார். எதிரியின் பதில், வழக்கு ஆவணங்கள் மற்றும் வழக்கின் சூழ்நிலை ஆகிய அனைத்தும் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டன.

**11.3.** இரவு நேரத்தில் எதிரி, அ.சா.1 – மாலதியை ஆபாசமாகப் பேசி, பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கினார் என்பதற்காக, இ.த.ச. பிரிவுகள் 294(b), 354A மற்றும் பிரிவு 4 – பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றங்கள் அவர் மீது நிரூபிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், எதிரிக்கு எதிராக பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வேறு வழக்குகள் எதுவும் இருப்பதாகக் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்படவில்லை.

**11.4.** எதிரி மீது மொத்தம் பத்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றபோதிலும், அதில் ஆறு வழக்குகள் இந்திய வெடிபொருள் சட்டத்தின் (Explosives Act) கீழ் பதிவு செய்யப்பட்டவையாகும். எதிரி வசிக்கக்கூடிய பகுதிகளில் பட்டாசு தயாரிப்பது ஒரு பிரதான தொழில் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், எதிரி மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தும் பழைய வழக்குகள் என்பதும், இவ்வழக்குச் சம்பவத்திற்குப் பிறகு ஒரேயொரு வழக்கு மட்டுமே அவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் காவல்துறை தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து தெரிகிறது. மேலும், எதிரிக்கு எதிராக முந்தைய தண்டனை ஏதேனும் இருப்பதாக அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. இவ்வழக்கில் எதிரியின் செயலால் மாலதிக்கு துன்புறுத்தல் மட்டுமே ஏற்பட்டுள்ளது தவிர, அவருக்கு உடலளவில் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

**11.5.** இதன் மேலே பரிசீலனை செய்யப்பட்டதன் மொத்த தொகுப்பாக, எதிரிக்கு இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழான குற்றத்திற்கு ரூ. 2,000/– அபராதமும், பிரிவு 354A–ன் கீழான குற்றத்திற்கு இரண்டு வாரங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ. 8,000/– அபராதமும், பிரிவு 4 – பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றத்திற்கு இரண்டு வாரங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ. 10,000/– அபராதமும் விதித்து தண்டனை அளிக்கப்படுகிறது. மேற்படி அபராதத் தொகையை எதிரி செலுத்தத் தவறினால், ஒவ்வொரு தவறுக்கும் கூடுதலாக மூன்று மாதங்கள் சாதாரண சிறை தண்டனை



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.30 21:23:48 +0530

அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. (மொத்த அபராதத் தொகை ரூ. 20,000/-). மொத்த அபராத தொகையை அ.சா.1 - மாலதிக்கு கு.வி.மு.ச. பிரிவு 357ன் கீழ் இழப்பீடாக கொடுக்க வேண்டும்.

**11.6.** எதிரி இவ்வழக்கில் 19.07.2019 ஆம் தேதியிலிருந்து 02.08.2019 ஆம் தேதி வரை சிறையில் இருந்த காலத்தை, அவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை காலத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 428-ன் கீழ் கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 30.03.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

(ஒம்/-சா.வரதராஜன்)
நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்

## பிற்சேர்க்கை

**1. அரசு தரப்பு சாட்சிகள் :-**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. மாலதி |
| அ.சா.2 | திரு.கண்ணன் |
| அ.சா.3 | திரு.சுப்பிரமணியன் |
| அ.சா.4 | திரு.காளிமுத்து |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 19.07.2019 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 19.07.2019 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | 19.07.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 19.07.2019 | மாதிரிவரைபடம் |

**3. அரசு தரப்பு சான்று பொருள்** :-இல்லை.
**4. எதிரி தரப்பு சாட்சிகள்** :- இல்லை
**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்** :- இல்லை
**6. எதிரி தரப்பு சான்று பொருட்கள்** :- இல்லை

(ஒம்/-சா.வரதராஜன்)
நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்

**குறிப்பு :-**
1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
4. தீர்ப்பு நகல் இலவசமாக எதிரிக்கு வழங்கப்பட்டது.
5. அபராதம் வசூலிக்கப்பட்டது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 19:33:56 +0530

**// உண்மை நகல்//**

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.30 19:34:14 +0530

**நீதித்துறை நடுவர் எண்.II,**
**சாத்தூர்**